**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARAIKUDI.**

**CCNo. 548/2022 PW . 1**

| | | | |
|---|---|---|---|
| Name : **மணிகண்டன்** | | Fathers Name | : **கிருஷ்ணன்** |
| Village: | | Taluk | : |
| Age : | | Occupation | : |
| Caste : | | Religion | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.02.2024

**1 முதல் 3 எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.**

---------------------------------------------------------------------------------------------------------

**முதல் விசாரணை:**

நான் காரைக்குடியில் வசிக்கிறேன். ஹோட்டலில் வேலை செய்து வருகிறேன். வழக்கின் எதிரிகளை தெரியும். பாட்டி லெட்சுமி அம்மாள் பட்டியல் சாட்சி 1ஆவார். எனது தாயார் புஷ்பவள்ளி பட்டியல் சாட்சி 2 ஆவார். அவர்கள் இருவரும் இறந்துவிட்டனர். எனது பாட்டி லெட்சுமி அம்மாள் என்பவருக்கு நம்பர் 69 முத்துப்பட்டினம் காரைக்குடியில் வீடும் இடமும் சொந்தமாக இருந்தது. 2014ம் வருடம் மேற்படி இடத்தை விற்பனை செய்வதற்காக எனது பாட்டி லெட்சுமி அம்மாள் ஏற்பாடு செய்தார். இது சம்பந்தமாக எனது நண்பர் பாலா என்பவர் மூலமாக வழக்கின் 3ம் எதிரி அழகர் என்பவருடன் இடம் விற்பனை செய்வது தொடர்பாக பேசினேன். எனக்கும் எனது தயாருக்கும் தெரிந்த செந்தில்நாதன் என்பவர் இந்த விபரம் தெரிந்துகொண்டு என்னிடம் வந்து சொத்துக்கள் நிறைய வாங்கி விற்பனை செய்து வருவதாகவும், தனது நண்பர் ரவீந்திரன் என்பவரிடம் மேற்படி சொத்தை பவர் எழுதி கொடுக்குமாறு சொன்னார். இந்த விபரத்திற்கு நானும் எனது பாட்டியும் ஒப்புதல் அளித்தோம். அதன் அடிப்படையில் மேற்படி சொத்திற்கு விலையாக ரூபாய் ஒரு கோடியே முப்பது இலட்சம் செந்தில்நாதன் என்பவருக்கு விற்பனை செய்வதாக எனது பாட்டி எனது தாயார் மற்றும் நான் சேர்ந்து முடிவு எடுத்தோம். அவ்வாறு பணத்தை கொடுத்து இடத்தை பெற்றுக்கொள்வதாக செந்தில்நாதன் என்பவரும் எங்களுக்கு உறுதியளித்தார். 2014ம் வருடம் இறுதியில் செந்தில்நாதன் என்பவர் மேற்படி இடத்திற்கு முன்தொகையாக ரூபாய் 3லட்சத்து ஐம்பதாயிரத்தை எனது அம்மாவிடம் 2லட்சம் ரூபாயும் என்னிடம் ஒருலட்சத்து ஐம்பதாயிரமும் ரொக்கமாக கொடுத்தார். மேலும் செந்தில்நாதன் என்பவர் அந்த சொத்தினை தனக்கு தெரிந்த ரவீந்திரன் என்பவர் பெயருக்கு எனது பாட்டி லெட்சுமி அம்மாளை பவர் எழுதி கொடுக்குமாறு சொன்னார். அதற்கு நாங்கள் ஒத்துக்கொண்டோம். அதன் அடிப்படையில் 2014ம் வருடம் மேற்படி நபர் ரவீந்திரன் என்பவருக்கு எனது பாட்டி பவர்

எழுதிகொடுத்தார். அதை பத்திர அலுவலகத்தில் பதிவு செய்தபோது அதில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். என்னுடன் செல்வகுமார் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தார். 2014ம் வருடம் இறுதியில் செந்தில்நாதன் எனது அம்மாவிற்கு செல்போனில் தொடர்புகொண்டு தான் மலேசியாநாட்டில் இருப்பதாகவும் மேற்படி பவர் எழுதிகொடுத்த ரவீந்திரன் என்பவரிடமிருந்து செந்தில்நாதன் மனைவி கௌரி என்பவர் பெயருக்கு கிரயமாக மேற்படி சொத்தை எழுதிகொடுக்க சொன்னார். நான் செந்தில்நாதனிடம் இடத்திற்கான மீததொகையை அவரிடம் கேட்டதற்கு அவர் தான் ஊருக்கு வந்து தருவதாக சொன்னார். 2014ம் வருடம் தொடர்ச்சியாக ரவீந்திரன் என்பவரிடமிருந்து செந்தில்நாதன் மனைவி கௌரி என்பவர் பெயருக்கு மேற்படி எனது பாட்டிக்கு சொந்தமான சொத்தை விற்பனை மாற்றம் செய்து கிரயமாக அளித்துவிட்டார். இந்த விபரம் எங்கள் அனைவருக்கும் தெரியும். ஆனால் செந்தில்நாதன் ஏற்கனவே அந்த இடத்திற்கு பேசிய தொகையை செலுத்தவில்லை. பின்னர் எங்களுக்கு செந்தில்நாதனை அறிமுகம் செய்த காரைக்குடி பேருந்துநிலையத்தில் கடை வைத்திருந்த அழகர் என்பவரை சந்தித்து நடந்த விபரத்தை கூறி மீத தொகையை செந்தில்நாதனிடமிருந்து பெற்று தருமாறு மேற்கண்ட விபரங்களை சொல்லி கேட்டோம். அப்போது கௌரி அங்கு இருந்தார். அவரிடம் இது சம்பந்தமாக எனது பாட்டிக்கு சொந்தமான மேற்படி சொத்தின் பணத்தை கேட்டதற்கு அழகர் மற்றும் கௌரி ஆகியோர் எங்கள் இடம் தொடர்பாக பணம் எதுவும் கொடுக்கமுடியாது. அதையும் மீறி கேட்டுவந்தால் கொலை செய்துவிடுவோம் என்று இருவரும் மிரட்டினார்கள். பின்னர் வடக்கு காவல்நிலையத்தில் நடந்த விபரம் குறித்து பட்டியல் சாட்சி 1 மூலம் புகார் அளித்தோம். போலீசார் விசாரணை செய்தார்கள். என்னிடம் காட்டப்படுவது எனது பாட்டி கொடுத்த புகார் ஆகும். அதில் உள்ளது அவரது கையெழுத்து ஆகும். அந்த புகாரில் உள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். விசாரணையின்போது நான், எனது பாட்டி மற்றும் தாயாருடன் காவல்நிலையத்தில் இருந்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**: வாய்ப்பு அளித்தும் இல்லை.